மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி, திருச்சியைப் பொறுத்தவரை, ஏற்கெனவே மாண்புமிகு அண்ணன் திரு. கே.என். நேரு அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது, பல்வேறு புதிய வழித்தடங்கள் அங்கே இயக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால்,* trailer buses *எல்லாம் விடப்பட்டு, திருச்சிக்குப் பெருமை சேர்த்தவர் அண்ணன் அவர்கள். அவர் குறிப்பிடுகின்ற பகுதிகள் வெவ்வேறு பகுதிகளாக திருச்சியில் இருக்கின்றவை. அந்தப் பகுதிகளை இணைக்க வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் அவர் வைக்கின்ற கோரிக்கையையேற்று விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைர் தலைவர்: *வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பிரபாகரன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

130—

திருக்கோயிலைப் புனரமைத்தல்

***15239—திரு. ம. பிரபாகரன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி, ஆலத்தூர் ஊராட்சி, செட்டிகுளம் கிராமத்தில் உள்ள அருள்மிகு பெருமாள் திருக்கோயிலைப் புனரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2023 ஏப்ரல் 10]

(அ) மற்றும் (ஆ) ஆலத்தூர் ஊராட்சி, செட்டிகுளம் கிராமத்தில் அமைந்திருக்கின்ற அருள்மிகு பெருமாள் திருக்கோயில் கும்பாபிஷேகத்திற்கான திருப்பணிகள் எடுத்துக்கொள்ளப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார். இந்தத் திருக்கோயிலுக்கு ரூபாய் 25 இலட்சம் செலவில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் சார்பில் தற்போது மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. தொல்லியல் துறையினுடைய அனுமதி பெறப்பட்டு, மண்டலக் குழு வல்லுநர்களின் மதிப்பீடு அறிக்கை தயார் செய்யப்பட்டு, அதன் பிறகு மாநிலக் குழுவிலே வைக்கப்பட்டு, இந்தத் திருக்கோயிலினுடைய திருப்பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் ஆரம்பிக்கப்பட்டு, ஓராண்டு நிறைவுறுவதற்குள் அந்தப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு, குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பிரபாகரன் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள்.*

திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், வெங்கனூர் விருத்தாசலேஸ்வரர் என்கின்ற அருள்மிகு பழமலைநாதர் திருக்கோயில் 1793 ஆம் ஆண்டு கட்டப்பட்ட பிரசித்தி பெற்ற சிவன் ஆலயம் ஆகும். இந்த ஆலயத்திற்குக் குடமுழுக்குச் செய்து நீண்ட ஆண்டுகளாகின்றன. எனவே, சிதிலமடைந்த இத்திருக்கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்குச் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெங்கனூர் அருள்மிகு பழமலைநாதர் திருக்கோயில் என்பது, 400 ஆண்டுகளுக்கு முந்தைய திருக்கோயில். கடைசியாக அந்தத் திருக்கோயிலுக்கு 2008 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடத்தப்பட்டிருக்கின்றது. ஆகம விதிப்படி,*

12 ஆண்டுகள் முடிவுற்றவுடன் திருக்கோயில்களுக்கு திருப்பணிகளை மேற்கொள்ள வேண்டும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இப்படிப்பட்ட திருக்கோயில்களையெல்லாம் கணக்கில் எடுத்து, உடனடியாக திருப்பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். இந்த ஆட்சி ஏற்பட்டவுடன், இந்தத் திருக்கோயிலையும் தொல்லியல் துறை வல்லுநர்கள் குழு ஆய்வு செய்து, மண்டலக் குழுவினுடைய பரிந்துரைக்கு தயாராக வைத்திருக்கின்றார்கள். சுமார் 60 இலட்சம் ரூபாய் அளவிற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கின்றது. உபயதாரர்களும் இந்தத் திருக்கோயில் திருப்பணிக்குத் தயாராக இருக்கின்ற நிலையில், ஓரிரு மாதங்களில் அந்தத் திருப்பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள்.*

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி, காரிமங்கலத்தில் பழமை வாய்ந்த இலட்சுமி நாராயணா அருணீஸ்வரர் திருக்கோயில் திருப்பணிக்கு இன்றைய எதிர்க்கட்சித் தலைவர், அன்றைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் 83 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கித் தந்தார்கள். திட்ட மதிப்பீடு தயார் செய்து கொடுக்காத காரணத்தினால், அந்த வேலைகள் முழுவதும் முடிவதற்கு முன்பாகவே 8 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாயைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். பழமை வாய்ந்த இந்தத் திருக்கோயிலுக்கு 8 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாயைத் திரும்பவும் வழங்கி, மேலும் கூடுதல் நிதி வழங்கி, நிலுவையிலுள்ள பணிகள் அனைத்தையும் முடித்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இலட்சுமி நாராயணா அருணீஸ்வரர் திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் மேற்கொள்ள கூடுதல் நிதி 8 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் வழங்க

2023 ஏப்ரல் 10]

வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். அதற்குண்டான கருத்துரு இணை ஆணையர் வாயிலாகப் பெறப்பட்டிருந்தால், இன்றைய தினமே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவைப் பெற்று, அந்தத் தொகையை விடுவிப்போம். அதுமட்டுமல்லாமல், இன்றைய தினமே இணை ஆணையர் அவர்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தத் திருக்கோயிலை ஆய்வு செய்ய நடவடிக்கை எடுத்து, கூடுதலாக நிதி தேவைப்பட்டாலும், அந்த நிதியையும் துறை வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

எதிர்க்கட்சித் துணைத் தலைவரை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதை நேரடி ஒளிபரப்பு செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானங்கள். (குறுக்கீடு) இன்றைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் என் அறைக்கு வந்தபோது 'LOP-க்கு, Zero hour-ல் எழுப்புவதற்கு எதுவும் வாய்ப்பு இருக்கிறதா?' என்று கேட்டேன். இன்றைக்கு வேண்டாம் என்று சொன்னார்களே! (குறுக்கீடு) இல்லை என்று சொன்னார்களே! அதைத்தான் சொன்னேன். (குறுக்கீடு) திரும்பவும் வந்து கொறடா சொல்லவில்லையே! (குறுக்கீடு) நாளைக்கு என்று சொன்னேன். (குறுக்கீடு) இல்லை, என்னிடம் நீங்கள் கேட்டீர்கள், (குறுக்கீடு) நாளைய தினம் எடுத்துக்கொள்வோமே. (குறுக்கீடு) நாளைய தினம் எடுத்துக்கொள்வோமே. (குறுக்கீடு) நாளைய தினம் எடுத்துக்கொள்வோம். (குறுக்கீடு) நாளைய தினம் எடுத்துக்கொண்டால் நல்லது. (குறுக்கீடு) ஏனென்றால், ஏற்கெனவே தீர்மானங்கள், (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*